**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 532/2025**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முகராஜன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | துரைச்சாமிநாடார் | தொழில் | : | சிறப்பு உதவியாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 66 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 17.04.2026.

**(4ம் எதிரி ஆஜர். 5ம் எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். 1, 2, 3, 6 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். நான் கடந்த 24.10.2017 ம் தேதி ஆலங்குளம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, 13.00 மணிக்கு ஆலங்குளம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அவர்களுக்கு உதவியாக நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் மேகநாதன், தலைமைக்காவலர்கள் முருகேசன், மரியராஜாசிங் மற்றும் காவலர் பொன்னுபாண்டி ஆகியோர் சகிதம் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சுற்றி வரும்போது கிடைத்த ரகசிய தகவலின் படி ஆலங்குளம் - துத்திகுளம் மெயின்ரோட்டில் மாயமான்குறிச்சி விலக்கில் வாகனத்தணிக்கை செய்யும்போது, அந்த வழியாக வந்த TN-72-AZ-5551 என்ற பதிவெண் கொண் ஸ்கார்பியோ காரினை நிறுத்தி சோதனை செய்தபோது, மேற்படி வாகனத்தை ஓட்டி வந்த கீழபத்தமுடையார்புரம்

செல்லப்பா மகன் சரவணன் மற்றும் அவருடன் இருந்த அதே ஊரைச் சேர்ந்த அருணகிரி நாடார் மகன் ஜெயபால், துரைச்சாமி மகன் இசக்கிமுத்து ஆகியோர் இருந்தனர்.

மேற்படி வாகனத்தை சோதனை செய்தபோது, வாகனத்தில் 750 மிலி பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் பாட்டிலில் ரேஸ் விஸ்கி என்று போலியான லேபில் ஒட்டப்பட்ட பாட்டில்களில் மதுவுடன் 50 பாட்டில்கள் விற்பனைக்காக வைத்திருந்தார்கள். அதில் ஒரு பாட்டிலை மூடியை திறந்து முகர்ந்து பார்த்தபோது நெடிய விஷ வாடையுடன் மதிமயக்கம் ஏற்படுத்தும் மதுபானம் காணப்பட்டது.

மேற்படி உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் என்று தெரிந்தும் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தும் நோக்கத்துடன் விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரிகளை 13.15 மணிக்கு கைது செய்து, மாதிரிக்காக 4 பாட்டில்களின் முகப்பில் வெள்ளைத்துணியால் சுற்றி SHO சீல் வைத்து சாட்சிகள் கருப்பசாமி, வரதராஜன் முன்னிலையில் 13.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினோம். பின்பு எதிரிகளை விசாரிக்க எதிரி சரவணன் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை சாட்சிகள் கருப்பசாமி, வரதராஜன் முன்னிலையில் 14.00 மணிக்கு பதிவு செய்தோம்.

பின்னர் சரவணன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தனது அண்ணன் கண்ணன் மற்றும் அவருடன் இருந்த நன்கு தெரிந்த இரண்டு நபர்கள் விற்பனைக்காக கொடுத்த போலி மதுபானங்களை வாங்கி விற்பனை செய்த பின்பு அதிலிருந்து விற்பனை செய்தது போக மீதமுள்ள 200 பாட்டில்களை சுண்ணாம்பு தொழிற்சாலையில் வைத்திருப்பதாகவும்,

தன்னை கூட்டிச் சென்றால் கண்ணன் என்பவரையும், அவருடன் இருக்கும் நபர்களையும் காட்டுகிறேன் என்று கூறியதால், எதிரிகள் சாட்சிகள் ஆகியோர்களுடன் விநாயகா மினரல் கம்பெனிக்கு செல்லும்போது அங்கு நின்று கொண்டிருந்த லாரியில் இருந்த கண்ணன் மற்றும் அவருடன் இருந்த இருவரும் எங்களை கண்டதும் ஓடி தலைமறைவாகி விட்டார்கள்.

மேற்படி TN-47-S-9965 என்ற எண் கொண்ட லாரியை சோதனை செய்தபோது, லாரியில் 750 மிலி பிடிக்கக்கூடிய ரேஸ் விஸ்கி என்று போலி லேபில் ஒட்டப்பட்ட 150 பிளாஸ்டிக் பாட்டில்களில் முழு அளவு மதுபானம் இருந்தது. அதில் 4 பாட்டில்களை எடுத்து மாதிரிக்காக 4 பாட்டில்களின் முகப்பில் வெள்ளைத்துணியால் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது. இரண்டு சாக்குப்பைகளில் 180 மிலி பிடிக்கக்கூடிய லேபில் ஒட்டாத 200 பாட்டில்களில் முழு அளவு மது இருந்தது. அதில் 4 பாட்டில்களை எடுத்து மாதிரிக்காக 4 பாட்டில்களின் முகப்பில் வெள்ளைத்துணியால் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது. பாட்டில்களை மூடக்கூடிய எம்ஜிஎம் என்று எழுதப்பட்ட மூடிகள் 5 பண்டல்கள் இருந்தது. 20 லிட்டர் பிடிக்கக்கூடிய தண்ணீர் கேன் 5 இருந்தது. அதன் அருகில் நின்ற TN-76-Q-6021 என்ற பதிவெண்ட கொண்ட டிராக்டரை சோதனை செய்தபோது, அதன் டிரெய்லரில் போலி லேபில்கள், ஆயத்தீர்வை ஒரு பண்டல், 5 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளை கேன் 2ல் போலி மதுபானம் தயாரிக்க தேவையான முழு அளவு திரவம் மற்றும் அரை லிட்டர் பிடிக்கக்கூடிய 2 பாட்டில்களில் போலி மதுபானம் தயாரிக்க கூடிய திரவம் இருந்தது.

35 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளை நிற கேனில் 10 லிட்டர் போலி மதுபானம் இருந்தது. அதிலிருந்து 750 மிலி பிடிக்கக்கூடிய 4 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி மாதிரிக்காக எடுத்து முகப்பில் வெள்ளைத்துணியால் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது. மீதமுள்ள பொருட்கள் அனைத்தையும், சொத்துக்களையும் சாட்சிகள் கருப்பசாமி, வரதராஜன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றி, விற்பனைக்காக வைத்திருந்த மதுபானங்களையும், போலி லேபில்கள், ஆயத்தீர்வை ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றி எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்கள் சகிதம் நிலையம் 16.00 மணிக்கு வந்து காவல்நிலைய குற்ற எண்.1053/2017, சட்டப்பிரிவுகள் 4(1)(aaa), 4(1-A) TNP Act (Transport), 468, 473 இதசவின் படி வழக்கு பதிவு செய்ய நான் காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.19 13:42:05 +0530

<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 532/2025</u>

<u>வழக்கு சாட்சி PW-2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மேகநாதன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பழனிச்சாமி | தொழில் | : | சிறப்பு உதவியாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | பாவூர்சத்திரம் | வயது | : | 65 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 17.04.2026.

**(4ம் எதிரி ஆஜர். 5ம் எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். 1, 2, 3, 6 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். நான் கடந்த 24.10.2017 ம் தேதி ஆலங்குளம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, 13.00 மணிக்கு ஆலங்குளம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகராஜன், தலைமைக்காவலர்கள் முருகேசன், மரியராஜாசிங் மற்றும் காவலர் பொன்னுபாண்டி ஆகியோர் சகிதம் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சுற்றி வரும்போது கிடைத்த ரகசிய தகவலின் படி ஆலங்குளம் - துத்திகுளம் மெயின்ரோட்டில் மாயமான்குறிச்சி விலக்கில் வாகனத்தணிக்கை செய்யும்போது, அந்த வழியாக வந்த TN-72-AZ-5551 என்ற பதிவெண் கொண்ட ஸ்கார்பியோ காரினை நிறுத்தி சோதனை செய்தபோது, மேற்படி வாகனத்தை ஓட்டி

வந்த கீழபத்தமுடையார்புரத்தை சேர்ந்த சரவணன், ஜெயபால், இசக்கிமுத்து ஆகியோர் இருந்தனர்.

மேற்படி வாகனத்தை சோதனை செய்தபோது, வாகனத்தில் 750 மிலி பிடிக்கக்கூடிய முழு அளவு கொண்ட பிளாஸ்டிக் பாட்டிலில் ரேஸ் விஸ்கி என்று போலியான லேபில் ஒட்டப்பட்ட பாட்டில்களில் மதுவுடன் 50 பாட்டில்கள் விற்பனைக்காக வைத்திருந்தார்கள். அதில் ஒரு பாட்டிலை மூடியை திறந்து முகர்ந்து பார்த்தபோது மதிமயக்கும் விஷவாடையுடன் கூடிய மதுபானம் இருந்தது.

இது தொடர்பாக வாகனத்தில் வந்த சரவணன் மற்றும் அவருடன் வந்த இருவரையும் 13.15 மணிக்கு கைது செய்து, மாதிரிக்காக 4 பாட்டில்களின் முகப்பில் வெள்ளைத்துணியால் சுற்றி SHO சீல் வைத்து சாட்சிகள் கருப்பசாமி, வரதராஜன் முன்னிலையில் 13.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினோம். பின்பு இது தொடர்பாக வாகனத்தில் வந்த சரவணன் என்பவரை விசாரிக்க தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை சாட்சிகள் கருப்பசாமி, வரதராஜன் முன்னிலையில் 14.00 மணிக்கு பதிவு செய்தோம்.

பின்னர் சரவணன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தனது அண்ணன் கண்ணன் என்பவருக்கு அறிமுகமான இரண்டு நபர்கள் விற்பனைக்காக கொடுத்த போலி மதுபானங்களை வாங்கி விற்பனை செய்த பின்பு அதிலிருந்து விற்பனை செய்தது போக மீதமுள்ள 200 பாட்டில்களை விநாயகா மினரல்ஸ் என்ற தொழிற்சாலையில் வைத்திருப்பதாகவும், தன்னை கூட்டிச் சென்றால் கண்ணன் என்பவரையும், அவருடன் இருக்கும் நபர்களையும் காட்டுகிறேன் என்று

கூறியதால், எதிரிகள்  சாட்சிகள் ஆகியோர்களுடன் விநாயகா மினரல் கம்பெனிக்கு செல்லும்போது அங்கு நின்று கொண்டிருந்த லாரியில் இருந்த கண்ணன் மற்றும் அவருடன் இருந்த இருவரும் எங்களை கண்டதும் ஓடி விட்டார்கள்.

மேற்படி TN-47-S-9965 என்ற எண் கொண்ட லாரியை சோதனை செய்தபோது, லாரியில் 750 மிலி பிடிக்கக்கூடிய ரேஸ் விஸ்கி என்று போலி லேபில் ஒட்டப்பட்ட 150 பிளாஸ்டிக் பாட்டில்களில் முழு அளவு மதுபானம் இருந்தது. அதில் 4 பாட்டில்களை எடுத்து மாதிரிக்காக 4 பாட்டில்களின் முகப்பில் வெள்ளைத்துணியால் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது. இரண்டு வெள்ளைநிற சாக்குப்பைகளில் 180 மிலி பிடிக்கக்கூடிய லேபில் ஒட்டாத 200 கண்ணாடி பாட்டில்களில் முழு அளவு மது இருந்தது. அதில் 4 பாட்டில்களை எடுத்து மாதிரிக்காக 4 பாட்டில்களின் முகப்பில் வெள்ளைத்துணியால் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது. பாட்டில்களை மூடக்கூடிய எம்ஜிஎம் என்று எழுதப்பட்ட மூடிகள் 5 பண்டல்கள் இருந்தது. 20 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளை நிற தண்ணீர் கேன் 5 இருந்தது. அதன் அருகில் நின்ற TN-76-Q-6021 என்ற பதிவெண்ட கொண்ட டிராக்டரை சோதனை செய்தபோது, அதன் டிரெய்லரில் போலி லேபில்கள், போலியான ஆயத்தீர்வை பண்டல், 5 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளை கேன் 2 ல் போலி மதுபானம் தயாரிக்க தேவையான முழு அளவு திரவம் மற்றும் அரை லிட்டர் பிடிக்கக்கூடிய 2 பாட்டில்களில் போலி மதுபானம் தயாரிக்க கூடிய திரவம் இருந்தது.

35 லிட்டர் பிடிக்கக்கூடிய  வெள்ளை நிற கேனில் 10 லிட்டர் போலி மதுபானம் இருந்தது. அதிலிருந்து 750 மிலி பிடிக்கக்கூடிய 4 கண்ணாடி

பாட்டில்களில் தலா 500 மிலி மாதிரிக்காக எடுத்து முகப்பில் வெள்ளைத்துணியால் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது. மீதமுள்ள பொருட்கள் அனைத்தையும், சொத்துக்களையும் சாட்சிகள் கருப்பசாமி, வரதராஜன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றி, விற்பனைக்காக வைத்திருந்த மதுபானங்களையும், போலி லேபில்கள், ஆயத்தீர்வை ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றி எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்கள் சகிதம் நிலையம் 16.00 மணிக்கு வந்து காவல்நிலைய குற்ற எண்.1053/2017, சட்டப்பிரிவுகள் 4(1)(aaa), 4(1–A) TNP Act, 468, 471, 473 இதசவின் படி வழக்கு பதிவு செய்ய நான் காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.19 13:42:17 +0530